PUBLICATION : MAALAI MURASU DATE: JULY 27, 2018 EDITION: CHENNAI

மாலை முரசு




சோழவரம் ஒன்றியம் நல்லூர் ஊராட்சி மற்றும் எடப்பாளையம் கோஜான் பொறியியல் கல்லூரிசார்பில்பிளாஸ்டிக்ஒழிப்புகுறித்தவிழிப்புணர்வுமுகாம்நல்லூர்அரசுப்பள்ளியில் நடைபெற்றது.இதில் ஒன்றிய ஆணையர் குலசேகர், வட்டார வளர்ச்சி அலுவலர் நர்மதா பங்கேற்றுபிளாஸ்டிக்பொருட்களின்தீமைகள்குறித்துமாணவர்களிடம்எடுத்துரைத்தனர். இதில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மணிசேகர், நாட்டுநலப்பணி திட்ட அலுவலர் அன்புசெல்வன், ஊராட்சி செயலர் லோகநாதன்,நாட்டுநலப்பணி திட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.




நல்லூர் ஊராட்சியில் எடப்பாளையம் கோஜன் கல்லூரி நாட்டுநலப்பணி திட்ட மாணவர்கள் சார்பில் மரங்கள் நடப்பட்டது.

### கல்லூரி மாணவர்கள் நடத்திய

# சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு முகாம்!

பொன்னேரி,ஜூலை.27–

திருவள்ளூர் மாவட்டம் சோழவரம் அடுத்த எடப்பாளையம் கோஜான் பொறியியல்கல்லூரியின்நாட்டுநலப் பணி மாணவர்கள் சார்பில் மத்திய அரசின்தூய்மைபாரதம் திட்டத்தின்கீழ் நாட்டுநலப்பணி திட்ட முகாம் நல்லூர் ஊராட்சியில் நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக நடைபெற்ற கருத்தரங்கில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குலசேகர்,நர்மதா ஆகியோர் பங்கேற்று பிளாஸ்டிக் பொருட்களால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தனர்.

இதையடுத்து நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற அரசுப்பள்ளி மாணவர்கள் எந்த காரணத்தை கொண்டும் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்த மாட்டோம் என உறுதி மொழி ஏற்றனர்.

இதனை தொடர்ந்து இயற்கை வளத்தை மேம்படுத்தும் வகையில் கிராமம் முழுவதும்நூற்றுக்கும்மேற்பட்டமரங்கள்நடப்பட்டது. மேலும் பொதுமக்களுக்கு சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும்விதத்தில்கல்லூரிமாணவர்கள் கிராமம் முழுவதையும் தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

இதில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மணிசேகர், நாட்டுநலப்பணி திட்ட அலுவலர் அன்புசெல்வன், ஊராட்சி செயலர் லோகநாதன் மற்றும் நாட்டுநலப்பணி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

### விருத்தாச்சலத்தில்

# இளைஞர் முன்னணி கண்டன ஆர்ப்பாட்டம்!

கடலூர்,ஜூலை.27–

விருத்தாச்சலம் பாலக்கரையில் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி சார்

...

[illegible]னிலை மணிவாசகம், யுவராஜ், முருகானந்தம் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.